**மதுரமுரளி** Rs. 5/-

Registered as Newspaper in India R. No. 62828 / 95

Regd. No. TN / PMG (CCR) / 521 / 03 - 05 | Licensed to Post without prepayment WPP No. 319

வேணு : 9 | அக்டோபர் - 2003 | கானம் : 3




பத்தாவது ப்ரஹ்மோத்ஸவத்தில்
மாதுரிஸகீ ஸமேத ஸ்ரீ ப்ரேமிகவரதனின் பல்லக்கு புறப்பாடு


Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No.2, Old No. 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600 083 and Printed by Mrs. Sri. Kalaivani of Sri Maruthy Laser Printers, 200 (173), Peters Road, Chennai - 600 014. Editor : S. Sridhar.

Website : www.madhuramurali.org ; e-mail : contact@madhuramurali.org


ஸ்ரீ ஹரி:

ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜியின்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை




வேணு : 9 | அக்டோபர் - 2003 | கானம் : 3

www.madhuramurali.org


ஸ்ரீ ஜயதி:

## மாதுரிஸகீ ஸமேத ஸ்ரீ ப்ரேமிகவரதனின்
## பத்தாவது வருட ப்ரஹ்மோத்ஸவம்

19.08.2003 முதல் 28.08.2003 வரை   இடம் : மதுரபுரி ஆஸ்ரமம்



காலை புறப்பாடு – 20.08.2003




மாதுரிஸகீ ஸமேத ஸ்ரீ ப்ரேமிகவரதன்




அன்னகூடோத்ஸவம் –
கோவிந்த பட்டாபிஷேகம் – 24.08.2003



தீபஜ்யோத்ஸவம் – 25.08.2003



ராதா கல்யாணம் – 27.08.2003



தெப்போத்ஸவம் – 27.08.2003

## பிடாரியம்மன் கோயில் கும்பாபிஷேகம், ராஜகோபாலபுரம்,
## குத்தாலம் – 05.09.2003




கும்பாபிஷேக தினத்தன்று இரவு "ஹரே ராம .."
நாமகீர்த்தனத்துடன் வீதி புறப்பாடு



## ஸ்ரீ மாதவபெருமாள் திருக்கோயில் மஹாஸம்ப்ரோக்ஷணம்,
## கீழ்ச்சாலை, திருநாங்கூர் – 06.09.2003



நூதன ராஜகோபுரம்



ஸ்ரீ ஹரி:

# ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜியின்

# மதுரமுரளி

(தெய்வீக மாதப் பத்திரிகை)

வேணு : 9 அக்டோபர் 2003 கானம் : 3

## பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஸ்ரீ ஸ்வாமிஜியின் கீர்த்தனம் | 2 |
| 2. | மதுரமான மஹனீயர் - 95 | 3 |
| 3. | பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜியின் பதில்கள் | 6 |
| 4. | வேத கதைகள் - 76 | 8 |
| 5. | ஸனாதனப்புதிர் பகுதி - 30 | 10 |
| 6. | எந்தரோ மஹானுபாவுலு - 66 | 12 |
| 7. | பாலகர்களுக்கு ஒரு கதை - 70 | 16 |
| 8. | மாலே மணிவண்ணா - 13 | 17 |
| 9. | ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும் - 17 | 21 |
| 10. | ஸ்ரீ ஸ்வாமிஜியின் ஸம்பாஷணைகளிலிருந்து - 97 | 26 |
| 11. | பக்தர்களின் கவனத்திற்கு ! | 31 |


*அழகான சரீரம், அழகான மனைவி, சிறந்த புகழ், மேருமலை போல் குவிந்த மலைபோல் செல்வம் முதலிய எவை வாய்ப்பினும் மனமானது குருவினுடைய திருவடித் தாமரையில் (ஶரணடையாமல் போனால்) லயிக்காமல் போனால், அவைகளால் என்ன ப்ரயோஜனம்?*

- **ஆதிசங்கரரின் குர்வஷ்டகம்**

ஸ்ரீ ஹரி:

# ஸ்ரீ ஸ்வாமிஜியின் கீர்த்தனம்

ராகம் : மோஹனம் தாளம் : ஆதி

*பல்லவி*

***ஒருமுகமானது மனது ஸ்ரீ ஹரே - நின்***
***திருமுக மண்டலமதில் (ஒரு)***

*அனுபல்லவி*

***பரி பக்குவம் இல்லாத எளியேனுக்கும்***
***ஹரி குரு க்ருபையால் (ஒரு)***

*சரணம்*

***சந்த்ர சமான சீதள வதனமும்***
***சஞ்சல நயனமும் சம்பக நாசியும்***
***கொஞ்சி கொஞ்சிப் பேசும் சுந்தர அதரமும்***
***நெஞ்சை கொள்ளை கொண்டதனால் (ஒரு)***

Visit us at www.madhuramurali.org for

1. Detailed reports of major mission / satsang events with pictures viz. Utsavams, Samprokshanams, Thirthayatras, Bhagavatha Sapthaham.
2. Online Spiritual magazine "Madhura Murali" every month in English/Tamil.
3. Satsang news & updates on mission activities.
4. Sri Swamigal's lectures/essays
5. Articles on religion, Philosophy, lives of saints.
6. Downloadable free audio "Hare Rama......." Mahamantra chanting rendered in various raagas & more.

செப்டம்பர் மாதம் நான்காம் தேதியன்று ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி, நாமபிரசாரகர் ஸ்ரீ குருமூர்த்தி அவர்களுடன் மன்னார்குடி ஸ்ரீ ராஜகோபாலஸ்வாமி கோவிலுக்கு விஜயம் செய்து ஸ்வாமி தர்சனம் செய்தார்கள். அன்று மூலவருக்கு முப்பத்து எட்டு கிலோவில் தங்க கவசம் புதியதாக சாற்றப்பட்டிருந்தது. அங்கிருந்து ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி நீடாமங்கலம் அருகிலுள்ள பெரம்பூர் வந்தார்கள். இந்த கிராமத்தில்தான் குருநாதரான ஸ்ரீ போதேந்திர ஸ்வாமிகள் பலகாலம் தங்கியிருந்தார்கள். இங்குதான் ஊமைப் பையனை பேச வைத்து அவனை பரம பாகவதோத்தமராக மாற்றினார். அந்த ஊரிலே உள்ள ''ராதா நிலையம்'' என்ற கட்டிடத்தை ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜிக்கு அதன் உரிமையாளர் ஸ்ரீ ஸ்வாமிநாதன் அவர்கள் ஸமர்ப்பித்தார்கள். ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி அங்கு ஒரு பாகவத பாடசாலை ஆரம்பித்து நடத்துவதைப் பற்றி சிந்தித்து வருகின்றார்கள்.

செப்டம்பர் மாதம் ஐந்தாம் தேதி அன்று குத்தாலத்தை அடுத்த ராஜகோபாலபுரத்தில் ஆதிதிராவிடர் குடியிருப்பில் G.K.R. அறக்கட்டளையின் சார்பில் துவங்கியுள்ள, ''திருக்குலத்தோர் திருக்கோயில் திருப்பணித் திட்டத்தின்'' கீழ், முதல் கோவிலின் கும்பாபிஷேகம் நடைபெற்றது. ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜிக்கு ஊர் எல்லையில் இருந்து பூர்ணகும்பம் மரியாதையுடனும், மலர்கள் தூவியும், வாண வேடிக்கைகளுடனும் வரவேற்பு கொடுக்கப்பட்டது. அதை அடுத்து, கும்பாபிஷேகம் மிகவும் நன்றாக நடைபெற்றது. கும்பாபிஷேகம் முடிந்தவுடன் அவர்கள் வசிக்கும் பகுதிக்கு ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி விஜயம் செய்தபொழுது அங்கு இருந்த சிறிய குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை தன்னை மறந்து பக்தி பரவசத்துடன்,

*'ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே !*
*ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே!!'*

என்று ஆடிப்பாடியது அனைவரையும் ஆனந்த வெள்ளத்திலே மூழ்கடித்தது. அது முடிந்து அங்கிருந்து கிளம்பி பழையகூடலூரிலே

ஒரு நிகழ்ச்சியில் கலந்துகொண்டுவிட்டு அங்கிருந்து மதுரபுரி ஆஸ்ரமம் வந்து சேர்ந்தார்கள்.

செப்டம்பர் மாதம் ஆறாம் தேதி காலை ஏகாதசி; ஆகையால் ஸ்ரீ பிரேமிகவரதனின் திருமஞ்சனம், பூஜையை முடித்துக்கொண்டு உடனே திருநாங்கூர் கிளம்பினார்கள்.

அன்று மாலை திருநாங்கூர் திவ்யதேசம் புருஷோத்தமன் ஸன்னதி பிரகாரத்திலே வெகுநேரம் தியானம் செய்துகொண்டு இருந்தார்கள். மறுநாள் காலை அந்த ஊரிலே நடைபெற்ற பாம்புலி அம்மன் ஆலய கும்பாபிஷேகத்தில் கலந்துகொண்டுவிட்டு பக்தர்களுடன் திருநாங்கூரில் உள்ள திவ்யதேசங்களை ஸேவித்தார்கள். அன்று மாலை கீழச்சாலை ஸ்ரீ மாதவபெருமாள் கோவிலுக்குச் சென்று கும்பாபிஷேகத்திற்கான ஏற்பாட்டை பார்வையிட்டார்கள்.

மறுநாள், செப்டம்பர் 8-ந் தேதி காலை ஒன்பது மணி நாற்பது நிமிடத்திற்கு கும்பாபிஷேகம் மிகவும் வைபவமாக நடைபெற்றது. இந்தத் திருப்பணிக்கான செலவை, அதாவது சுமார் முப்பத்தைந்து லட்சத்தை தான் ஒருவராகக் கொடுத்த தர்மாத்மா ஸ்ரீ G.K. ராமமூர்த்தி அவர்களும் கலந்துகொண்டார்கள். கோவில் திருப்பணி மற்றும் வைபவத்தைக் கண்டு மிகவும் மகிழ்ச்சியடைந்தார்கள். கோவிலின் சார்பில் அவருக்கு மரியாதை செய்யப்பட்டது. மேலும் எண்ணற்ற பிரமுகர்களும் திரளான பக்தர்களும் இந்த வைபவத்தில் கலந்து கொண்டு இறைவனுடைய அருளுக்குப் பாத்திரமானார்கள்.

அன்று மதியம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி காரைக்காலில் புதியதாக தொடங்க இருக்கும் ஒரு மருத்துவமனைக்கும், அதன் உரிமையாளர் Dr. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் வீட்டிற்கும் விஜயம் செய்தார்கள். அந்த மருத்துவர் இலவசமாக வைத்தியம் செய்து வருகின்றார். நம்முடைய ஸ்வாமிஜியின் பெயரில் இலவச வைத்தியம் செய்ய அவர் அனுமதி கேட்க ஸ்ரீ ஸ்வாமிஜியும் மிகவும் ஸந்தோஷப்பட்டு அவருக்கு அருளாசி வழங்கினார்கள். பின்பு காரைக்காலில் ஒரு பாண்டுரங்க பஜனை மடத்திற்கும் ஒரு அரிசி ஆலைக்கும் விஜயம் செய்தார்கள்.

காரைக்கால் வருவதற்கு முன்பு சீர்காழியிலே கடைகள் எஸ்டேட் பெரிய பிரபுவான துரை அவர்கள் இல்லத்திற்கு விஜயம் செய்து அவர் புதியதாக கட்டியுள்ள கல்யாண மண்டபத்தையும் ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி பார்வையிட்டார்கள். அவருடன் திருவாலி சென்று

அடுத்ததாக அந்த கோவிலுக்கு திருப்பணி செய்வதற்கான ஆலோசனைகளை வழங்கினார்கள். மற்றும் சட்டநாதபுரத்திலே ஒரு பக்தருடைய வீட்டிற்கு விஜயம் செய்துவிட்டு, 8-ந் தேதி மாலை கீழச்சாலை ஸ்வாமி புறப்பாட்டில் கலந்துகொண்டார்கள். மறுநாள் செப்டம்பர் 9-ந் தேதி காலையில் ஸ்ரீரங்கம் சென்று அங்கு சில பக்தர்களின் வீடுகளுக்கு விஜயம் செய்து விட்டு, மறுநாள் செப்டம்பர் 10-ந் தேதி காலை தஞ்சாவூருக்கு சுமார் ஒன்பது மணி அளவிலே சென்றடைந்தார்கள்.

தஞ்சாவூரிலே நம்முடைய ஸ்வாமிஜியின் பரம பக்தரான ஸ்ரீ ராஜகோபால் அவர்கள் தன்னுடைய வீட்டினுடைய மாடியை மாற்றியமைத்து அதற்கு ''மதுரமுரளி பவனம்'' என்று பெயரிட்டு ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜிக்கு அர்ப்பணித்துள்ளார். அங்கு சென்றவுடன் ஸ்ரீ ஸ்வாமிஜிக்கு பாத பூஜை செய்யப்பட்டது. பிறகு அங்கிருந்து கிளம்பி வரதப்பையர் தெரு சென்றார்கள். அங்கு தியாகராஜர் என்ற பக்தர் தியாகராஜர் ஆராதித்து வந்த ஸ்ரீராமசந்திரமூர்த்தியை தன்னுடைய இல்லத்திலே வைத்து பூஜை செய்து வருகின்றார். அங்கு நம்முடைய ஸத்ஸங்கத்தைச் சேர்ந்த பக்தர்களால் திவ்யநாம ஸங்கீர்த்தனம் அந்த ராமருக்கு ஸமர்ப்பிக்கப்பட்டது. அந்த சிறிய வீட்டிலே அன்று நல்ல கூட்டம் கூடியது ஆச்சரியமாக இருந்தது.

பிறகு மீண்டும் தஞ்சாவூர் மதுரமுரளிபவனம் வர, அங்கு மதியம் இரண்டு மணிக்கு, பரம**பா**வுகர், பண்டிதர், ரஸிகஶிகாமணி, ராமபக்தர், ஸ்ரீ ஸ்வாமிநாத ஆத்ரேயன் அவர்கள் தியாகராஜ கீர்த்தனைகளுக்கு அப்படி அழகான அர்த்தங்களை எடுத்துரைத்தார். தஞ்சை ஹரிகதா வித்வாம்சினி கமலா மூர்த்தியும் ஸத்ஸங்கத்திற்கு வந்திருந்தார்கள். அது முடிந்தவுடன் ஸ்நாந, அனுஷ்டானங்களை முடித்துக்கொண்டு மாலையில் கோவிலில், போதேந்திராள் ஆராதனையாக இருப்பதால் பகவந்நாம போதேந்திர ஸ்வாமிகளைப் பற்றி உபன்யாசம் செய்தார்கள். அங்கிருந்து கிளம்பி மெலட்டூர் ஸ்ரீ வெங்கட்ராமன் அவர்களுக்குச் சொந்தமான பள்ளிக்கூடத்திற்கு விஜயம் செய்து அங்கு ஒரு மாங்கன்றை நட்டுவிட்டு அன்று இரவு சுமார் பத்து மணி அளவில் புதுக்கோட்டை சுந்தரேசன், ராஜம் தம்பதிகளுடைய கிருஹத்திற்கு விஜயம் செய்து சென்னை திரும்பினார்கள். (தொடரும்)

**– ஜயந்தி ஜானகிராமன்**

# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜியின் பதில்கள்

*கேள்வி : மிகவும் படித்தவர்கள், உயர்ந்த பதவியில் இருப்பவர்கள் கூட தவறானவர்களை குருவாகச் சென்று அடைகின்றார்களே?*

பதில் : நீங்கள் சொல்பவர்கள் எல்லாரும் உலக கல்வியிலும், உயர் பதவி வகிப்பதற்கான படிப்பிலும் மிகப் பெரியவர்களாக இருக்கலாம். ஆனால், ஆன்மீகம் என்றால் என்ன? உண்மையான ஞானி எப்படி இருப்பார்? எது அடைய வேண்டியது? என்பதைப் பற்றியெல்லாம் அவர்களுக்கு அடிப்படையான அறிவு கூட இருக்காது. உலகியல் கல்வியில் பெரியவர்களான அவர்கள் ஆன்மீக கல்வியில் பூஜ்யமாக இருப்பதே இதற்குக் காரணம்.

*கேள்வி : ஒரு மஹாத்மாவால் டெலிபோன் இல்லாமல் பேச முடியுமா?*

பதில் : ஆம். ஒரு யோகியால் ஒருவருடைய போன் நம்பர் கூட தெரியாமல் எந்த ஸாதனமும் இல்லாமல், தான் பேசவேண்டிய ஒருவருடன் அவருடைய தொலைபேசியில் பேசமுடியும். தொலைபேசிகள் போன்ற ஸாதனங்கள் எல்லாம் நம்முடைய மஹரிஷிகள் உபயோகப்படுத்திய ஸாதனங்களே!

*கேள்வி : வீணை வாசிப்பதும் ஒரு மோக்ஷ சாதனமா?*

பதில் : ஆம்! வீணை வாசிப்பதும் ஒரு மோக்ஷ சாதனம்தான். ஒரு மனிதனுடைய ப்ருஷ்டம், முதுகுத்தண்டு வடம், கழுத்து, தலை இந்த வடிவத்தைக் கொண்டுதான் வீணையே வடிவமைக்கப்பட்டுள்ளது. சரியான விதத்தில் வீணையை வாசித்தோமானால் அது அவனை யோகப் பாதையில் அழைத்துச் செல்லும்.

*கேள்வி : தெய்வம், தான் செய்வதையெல்லாம் பிரத்யக்ஷமாக செய்தாலாவது மனிதன் தெய்வத்திடம் நன்றியாக இருப்பான் அல்லவா?*

பதில் : பெற்றோர்கள் - அதிலும் குறிப்பாக தாயார் - ஒரு குழந்தையைப் பெற்று வளர்த்து ஆளாக்க எத்தனை பாடுபடுகின்றாள். ஆனால்,

கடைசியில் அந்த பெற்றோரையே துச்சமாக நினைப்பதோடு மட்டும் அல்லாமல் அவன், அவர்களோடு விரோதம் பாராட்டவில்லையா? பொதுவாகவே, மனிதன் சுயநலவாதி; கார்யவாதி; ஆகவே, அவனிடம் இதெல்லாம் எடுபடாது. புரிந்துகொள்ள வேண்டும் என்று நினைப்பவர் எப்படியும் புரிந்துகொள்ளலாம்.

---

ஸ்ரீ ஹரி:

## மதுரமுரளி சந்தா

''மதுரமுரளி'' மாத இதழுக்கு புதியதாக சந்தாதாரராக விரும்புபவர்கள் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி :

''மதுரமுரளி'', ப்ரேமிகபவனம், New No. 2, Old No. 24, நேதாஜி நகர், ஜாபர்கான்பேட்டை, சென்னை - 83.

சந்தா விவரம் : ஆண்டு சந்தா ரூ. 60/- தனி ப்ரதி ரூ. 5/-

ஆயுள் சந்தா ரூ. 1000/-

வெளிநாடு : ஆண்டு சந்தா : ரூ. 300/-

மதுரமுரளி இதழுக்கான சந்தாவை, **''குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன்'** என்ற பெயரில் மட்டுமே M.O. or DD. ஆக அனுப்பவேண்டும். தயவுசெய்து காசோலையாக அனுப்ப வேண்டாம். மணி ஆர்டரில் பணம் அனுப்பும்பொழுது, பெயர், முகவரி, மதுரமுரளி சந்தா எண் முதலியவற்றை (for Renewal) முதலியவற்றை "Space for Communication"ல் கட்டாயம் எழுத வேண்டும்.

மதுரமுரளிக்கான சந்தாவை புதுப்பிப்பவர்கள் (Renewal) சந்தா எண்ணை குறிப்பிட்டு Subscription Renewal என்று எழுதி அனுப்ப வேண்டும். சந்தா எண் இல்லாமல் வரும் சந்தா தொகையானது அவர்கள் பெயரில் எடுத்துக்கொள்ள இயலாது.

சந்தாதாரரின் முகவரியில் மாறுதல் ஏற்படும்பொழுது அதை அந்த மாதத்தின் 15-ந் தேதிக்குள் எழுதி அனுப்ப வேண்டும். 15-ந் தேதிக்கு மேல் வரும் முகவரி மாற்றத்தை அடுத்த மாதத்தில் தான் செயல்படுத்த முடியும். மாதத்தின் 2-ந் தேதிக்குப் பிறகு வரும் புதிய சந்தாதாரர்களுக்கு அடுத்த மாதம் முதல் தான் மதுரமுரளி அனுப்பமுடியும்.

Email-ல் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி : contact@madhuramurali.org

# வேத கதைகள் - 76

- தர்மஜ்ஞர், வாங்முக ஸார்வபௌம, மேலக்காவேரி
ப்ரஹ்மஸ்ரீ பஞ்சாபகேஶ ஶாஸ்த்ரிகள்

## பிராணிகளின் பெருமை

தேவர்கள் முப்பத்து முக்கோடிகள். அரக்கர்கள் அறுபத்து ஆறுகோடிகள். ஒரு சமயம் தேவலோகத்தில் இருந்த தேவர்களின் பசுக்களை அசுரர்கள், யாரும் கண்டுபிடிக்க முடியாத ஓர் இடத்தில் ஒளித்து வைத்தனர். மிகவும் இருட்டான ஒரு பள்ளத்தில் பசுக்களை வைத்து அசைக்க முடியாத பெரிய பாறையால் மூடி வைத்தனர். எவ்வளவு தேடியும் தேவர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை. உடன், தேவர்கள் தங்களுக்கு குருவான ப்ருஹஸ்பதியை ஶரணடைந்தனர். அந்த ப்ருஹஸ்பதியின் உத்பித் பலபித் என்ற யாகங்களால் அஸுரர்களின் பலத்தை போக்கடித்து பள்ளத்திலிருந்து பசுக்களை மேடான இடத்திற்கு கொண்டு வந்து பசுக்களை மீட்டனர். இந்த விபரம் ஸாம வேதத்தில் தாண்ட்ய ப்ராம்ஹணத்தில் கூறப்பட்டுள்ளது. இங்கு ப்ருஹஸ்பதியானவர் பசுக்களை மீட்டார் என்று கூறப்பட்டிருக்கிறது.

க்ருஷ்ண யஜுர்வேதத்தில் வலன் என்ற ஒரு அசுரன், தேவர்களின் ஆயிரம் பசுக்களை கவர்ந்து ஒரு பள்ளத்தில் ஒளித்து வைத்தான். இந்திரனே பசுக்களை தேடி பள்ளத்தை கண்டுபிடித்து ஆயிரம் பசுக்களை மீட்டான் என்று கூறுகிறது. ரிக் வேதத்தில் ஸரமா என்று தேவலோகத்தில் ஒரு நாய் இருந்தது. அசுரனால் ஒளித்து வைக்கப்பட்ட பசுக்களை இந்த ஸரமா என்ற நாயானது மீட்டதாக கூறப்பட்டுள்ளது. இதே வரலாறு க்ருஷ்ண யஜுர் வேதத்தில் ஏகாக்னி காண்டத்தில் கூறப்பட்டிருக்கிறது.

அரக்கர்கள், தேவர்களின் பசுக்களை ஒளித்து வைத்தபோது இந்திரன் ஸரமா என்ற தேவலோகத்து நாயின் பெண்ணை பார்த்து, ''நீ தேடிச் சென்று அரக்கர்களால் ஒளித்து வைக்கப்பட்ட பசுக்களை கண்டுபிடித்து மீட்டு வருவாயாக'' என்ற உத்தரவிட்டான். இந்திரன் உத்திரவை மேற்கொண்டு அந்த நாய் பசுக்களை தேடிச் சென்றது.

இந்திரனும் உடன் வந்தான். இந்த நாயானது எல்லா பள்ளங்களிலும் புகுந்து பசுக்களை தேடியது. ஒரு பள்ளத்தில் புகுந்து வெகுகாலம் நாய் வெளி வராததால் வெளியில் நின்ற இந்திரன், ''ஓ மிருகமே! பசுக்களை கண்டுபிடித்தாயா?'' என்று கேட்டான். அப்போது இந்த நாயானது, ''கண்டுபிடித்து விட்டேன்'' என்று உத்ஸாகத்துடன் கூறி பசுக்களுடன் வெளி வந்தது. இந்திரனும் மகிழ்ந்து இந்த நாய் கேட்ட வரங்களை அளித்தான் என்று கூறப்படுகிறது.

இன்றும் கொலையோ கொள்ளையோ நடந்தால் துப்பு துலக்க போலீஸ்காரர்கள் நாய்களை கொண்டு வருகிறார்கள். அவைகளும் உதவியாக இருக்கின்றன. நாய்களைக் கொண்டு துப்பு துலக்குவது வேதத்திலேயே இருக்கின்றது. வேதத்தில் கூறப்படாதது ஒன்றுமில்லை. வேதத்தில் எல்லாம் உளதற்க என்று திருமந்திரத்தில் கூறப்பட்டு இருக்கிறது.

---

பகவான் ஸ்ரீ யோகிராம்சுரத்குமார், திருவண்ணாமலையில், ஆரம்பத்தில் வந்து தங்கியிருந்தபொழுது முதல்முதலாக பெருமாள் என்ற பக்தர் அவரால் தடுத்தாட்கொள்ளப்பட்டார். அப்பொழுது, தான் தங்கியிருந்த இடத்தை யோகியார், காண்பித்த பொழுது பெருமாளுடைய கண்களில் நீர் வழிந்தது. பயம் பற்றிக்கொண்டது. நம்பவும் முடியவில்லை. காரணம் அந்த அளவில் பாம்புகளும், தேள்களும், கரையான்களும், குப்பைகளுமாக அந்த இடம் இருந்தது. பார்ப்பதற்கே அறுவருப்பாகவும் பயமாகவும் இருந்தது. ஆனால், அந்த விஷ கிருமிகள் யோகியாரை ஒன்றும் செய்யவில்லை. ஆனால், அவர் அப்பொழுது வெளியில் வந்தபொழுது மக்கள் பலர் அவரை அடித்து ஏசி துன்புறுத்தினார்கள். சீ என்ன உலகம், துஷ்ட ஜந்துகள் கூட தன்னை சீண்டியவர்களைதான் அல்லது தற்காப்புகாகத்தான் மற்றவர்களை தாக்குகின்றது. அவைகள் கூட மஹான்களை புரிந்துகொள்கின்றன. மனிதன்தான் தனக்கு தீங்கு இழைக்காதவர்களுக்குகூட துன்பம் விளைவித்து ஆனந்தம் அடைகின்றான்.

# ஸனாதனப்புதிர் - 30

- தொகுப்பு- **'ஆத்ரேயன்',** சென்னை

1. மனிதனை மீளாத்துயரத்தில் ஆழ்த்தி அழிக்கும் மூன்று எதிரிகள் எவை?
2. கடவுளை அடைய குலம், கோத்திரம், ஜாதி, தகுதி முதலியவை முக்கியமில்லை - பக்தி ஒன்றுதான் முக்கியம் என்பதை விளக்கிய நால்வரைக் கூறுக.
3. எல்லாமே வாஸுதேவ ஸ்வரூபம் என்று அறிந்தவர்கள், அரிதரிது என்று இரு ஸ்லோகங்கள் கீதையில் காணப்படுகின்றன - அத்தியாயம், எண் இவைகளைக் கூறுக.
4. எப்படி காற்றில்லாத இடத்தில் தீபம் அசையாமல் எரியுமோ அதே போல.... (பூர்த்தி செய்யவும்)
5. கடவுளை நான்கு விதமானவர்கள் பூஜிக்கிறார்கள் - யார் யார்? உதாரணத்துடன் விளக்கவும்.
6. குதிரைகளில், யானைகளில், பசுக்களில் உயர்ந்தது / சிறந்தது எது?
7. மரங்களில், பறவைகளில், நதிகளில் உயர்ந்தது / சிறந்தது எது?
8. தேவரிஷிகளில், சித்தர்களில் சிறந்தவர் / உயர்ந்தவர் யார்?
9. இப்பொழுது நடப்பது வைவஸ்வத மன்வந்தரம். இதற்கு முந்திய ஆறு மன்வந்தரங்கள் எவை?
10. பிரம்மாவின் இப்பொழுதய வயது என்ன?

---

*சுயகட்டுப்பாடு உள்ளவனுக்குத்தான் சமுதாய கட்டுப்பாடு தேவையில்லை. சுயக்கட்டுப்பாடு என்பது எல்லோருக்கும் சாத்யமான ஒரு விஷயம் அல்ல. ஆகவேதான் சமுதாயக் கட்டுப்பாடு அவசியமாகிறது.*

**- ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி**

## ஸனாதனப்புதிர் - பகுதி - 30 - பதில்கள்

1. காமம், க்ரோதம், லோபம் (சிற்றின்ப உணர்வு, கோபம், பேராசை)
2. நந்தனார், ரைதாஸ், சபரி, கண்ணப்பன்
3. அத்தியாயம் 7, ஸ்லோகங்கள் 3, 9.
4. ஆத்மவிசாரத்தில் ஈடுபட்டுள்ள யோகிகள் சலனமின்றி இருப்பார்கள். கீதை 6/ 19.
5. i. துயர் துடைக்க - திரௌபதி, கஜேந்திரன்

   ii. பிரம்மஞானத்தை வேண்டி - ஜனகர், உத்தவர்

   iii. செல்வத்தை வேண்டி - சுக்ரீவன், விபீஷணன், உபமன்யு, த்ருவன்

   iv பிரம்மத்தை அறிந்தவர்கள் - சுகர்.
6. குதிரைகளில் உச்சை சிரவஸ், யானைகளில் ஐராவதம், பசுக்களில் காமதேனு உயர்ந்தது.
7. அரசமரம், கருடன், கங்கை
8. நாரதர், கபிலர்
9. ஸ்வாயம்புவர், ஸ்வாரோசிஷர், உத்தமர், தாமஸர், ரைவதர், சாக்ஷுஷர் என்ற ஆறு மனுக்கள் – மன்வந்தரங்கள்
10. இரண்டு பரார்த்தம் ஆயுள் படைத்தவர். இரண்டாவது பரார்த்தத்திலுள்ள ஐம்பது வருஷங்களில் முதல் வருடத்தில், முதல் மாதத்தில், முதல் பக்ஷத்தில், முதல் நாளில், இரண்டாவது ஸாமத்தில், மூன்றாவது முகூர்த்தம்.

தெய்வீகம் என்பது புதியதாக எதையோ சம்பாதித்துக்கொள்வது அல்ல. நம் மனதில் பிறவி பிறவிகளாக ஏற்றுக்கொண்டதை எல்லாம் இறக்கி விடுவதுதான் தெய்வீகம்.

**- ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி**

# எந்தரோ மஹானுபாவுலு - 66

மஹாப்ரபு கௌராங்கர், நாம ஸங்கீர்த்தனத்துக்கு தடை விதித்த காஜியைத் தானே திருத்த வேண்டும் என நினைத்தார். தன் பக்தர்களிடம், ''நீங்கள் யாரும் பயப்பட வேண்டாம். காஜி முன்பு நானே நாமஸங்கீர்த்தனம் செய்துகொண்டு வருவேன். யார் எப்படி என்னைத் தடுக்கிறார்கள்? என்று பார்த்துவிடலாம்'' என்று கூறி அவர்களுக்குத் தைரியத்தை ஊட்டினார்.

நித்யானந்தரிடம், ''நான் இன்று மாலை நகர ஸங்கீர்த்தனம் செய்ய என் வீட்டிலிருந்து கிளம்புவேன். நமது பக்தர்களை என் வீட்டிற்கு வந்து சேருமாறு கூறிவிட வேண்டும். வெளிச்சத்திற்காக சில தீவட்டிகளைத் தயார் செய்துகொண்டு செல்வோம்'' என்றார். நகரத்திலுள்ள அனைத்து பக்தர்களுக்கும் செய்தி பரப்பப்பட்டது. நித்யானந்தருக்கும் ப்ரபுவே ஸங்கீர்த்தனம் செய்துகொண்டு நகர்வலம் வருவது பற்றி ஏக சந்தோஷம். அப்போதுதான் ஜனங்களுக்கு நாம ஸங்கீர்த்தனத்தின் மாதுர்யம் புரியும் என நினைத்தார். அவரே கையில் மணியை எடுத்துக்கொண்டு அலைந்து திரிந்து வீடு வீடாகச் சென்று மணியடித்து பக்தர்களை ப்ரபுவின் நாம ஸங்கீர்த்தனத்தில் கலந்துகொள்ள அழைத்தார். ஜனங்களுக்கு உத்ஸாஹம் கரைபுரண்டு ஓடியது.

நவத்வீபத்து ஜனங்கள், ப்ரபுவின் நாமஸங்கீர்த்தனத்தைப் பற்றி கேள்வியுற்றிருந்தனர். ஆனால், அனேகர் அதைக் கண்டுகளிக்கும் பாக்யம் பெறவில்லை. ஸ்ரீவாஸ்பண்டிதர் வீட்டில் சிலருக்குத்தான் அனுமதி உண்டு அல்லவா! இப்போது நகர மக்கள் அனைவருக்கும் ஆனந்தம் ஏற்பட்டது. ''தெருவில் மஹாப்ரபு பாடிக்கொண்டும் ஆடிக்கொண்டும் வருவாராமே! அதைக் காணும் பாக்யம் நமக்கும் கிடைக்குமே!!'' என உவகை அடைந்தனர்.

எல்லோரும் அவரவர் வீட்டு வாயிலில் வாழைத் தோரணங்கள் கட்டினர். வீதி அடைத்து பந்தல் போட்டனர். தெருவில் கோலமிட்டு தூபதீபங்கள் ஏற்றி நறுமணங்கமழ வைத்தனர். அங்கங்கு கொடிகள் பறந்தன. வண்ண வண்ண வஸ்திரங்களால் தோரணங்களும்

கொடிகளும் அமைத்தனர். ஒரு மஹாராஜாவின் விஜயத்துக்குக் கூட இப்படி ஒரு வரவேற்பு இருக்காது, அப்படி ஓர் அலங்காரம், எதிர்பார்ப்புகளுடன் நவத்வீபம் அன்று ஜொலித்தது.

மஹாப்ரபுவும் மதியம் முதல் இந்த நாமஸங்கீர்த்தனத்துக்காக பலத்த ஏற்பாடுகளைச் செய்துகொண்டார். தனது பக்தர்களை யார் முன்னே செல்ல வேண்டும், யார் பின்னே வரவேண்டும், யார் யார் எந்தெந்த வாத்யங்கள் வாசிக்க வேண்டும், எந்தெந்த கீர்த்தனங்களுக்கு யார் யார் நடனமாடவேண்டும் என்பது முதற்கொண்டு அவரே தீர்மானித்து அவரவர்களுக்குத் தகுந்த கட்டளைகளை இட்டார்.

மஹாப்ரபுவின் அந்தரங்க பக்தரான கதாதரர் அவருக்கு அலங்காரம் செய்துவிட்டார். அவருடைய சுருள்சுருளான கேசத்தில் நறுமணம் கமழும் விதவிதமான தைலங்களைப் பூசினார். அதை அழகாகப் பின்னி மாலதி, சண்பகம் போன்ற மலர்களால் அலங்கரித்தார். ஊர்த்வபுண்டரமிட்டார். குங்குமப்பூவைக் குழைத்து நெற்றியிலும் கன்னத்திலும் பொட்டுகள் வைத்தார். மன்மதனே பார்த்து வெட்கப்படும் அளவு அவருக்கு அலங்காரம் செய்தார். தரையில் புரளும் பீதாம்பரமும், முழங்காலளவு புரளும் வைஜயந்தி ஹாரமும் சோபையைக் கூட்டியது. விசேஷமாகத் தயார் செய்த தாம்பூலத்தால் சிவந்த அதரங்கள் கோவைப்பழத்தை பழித்தன. இப்படிப்பட்ட அலங்காரத்துடன் ப்ரபு வீட்டைவிட்டு ஜல்ஜல்லென்று கிளம்பியதும், மக்கள் 'ஹரிபோல் ஹரிபோல்' என உரக்க கீர்த்தனம் செய்ய நகரஸங்கீர்த்தனம் ஆரம்பமாகியது.

ஒருவரையொருவர் தள்ளிக்கொண்டு அனைவரும் மஹா ப்ரபுவின் அருகில் வர ப்ரபு அனைவரையும் சாந்தப்படுத்தினார். கதாதரர், ப்ரபுவின் சரணங்களில் சதங்கை அணிவித்தார். பக்தர்களும் சதங்கை அணிந்துகொண்டனர். ப்ரபு முதலில் தன் கால்களால் சதங்கை ஒலி எழுப்ப ஆயிரக்கணக்கான பக்தர்களும் சதங்கை ஒலி எழுப்ப ஆனந்த அலை எழும்பியது. ஸ்த்ரீபுருஷ பேதமின்றி கூட்டம் நாம ஸங்கீர்த்தனத்தில் ஆழ்ந்தது.

சாயங்காலவேளை - சுக்லபக்ஷ அரைச்சந்திரன் தோன்றி பூர்ணசந்திரனான மஹாப்ரபுவைக் கண்டு களித்தான். ப்ரபு,

பக்தர்களை வரிசையாக பாடிக்கொண்டு முன்னே செல்லுமாறு பணித்தார். பக்தி சேனையின் சேனாதிபதியாக வ்ருத்தரான ஸ்ரீ அத்வைதாசார்யர் சென்றார். பின்னால், ஸ்ரீவாஸ்பண்டிதர் தன் குழுவுடன் சென்றார். அதற்குப் பிறகு ஹரிதாஸர் தன் பக்தர்களுடன் சென்றார். கடைசியில் மஹாப்ரபு தனது ப்ரதான பக்தர்களுடன் இடதுபுறம் கதாதரரும் வலதுபுறம் நித்யானந்தரும் சூழ நடந்து சென்றார்.

மஹாப்ரபு அனைவருக்கும் நூபுரத்தை ஒலித்து ஸங்கேதம் செய்ததும் ம்ருதங்கமும் கரதாளமும் விண்ணை எட்டியது. மக்கள் தன் சரீர **பா**வத்தை இழந்து நாட்டியமாட ஆரம்பித்தனர். அனைவரது பாதங்களும் பூமியிலிருந்து மேலே எழும்பி ஆட, இதுவரை கண்டிராத ஒரு அத்புத காட்சி அங்கு நிலவியது. நாட்டியமும், கீர்த்தனங்களும், மேளதாளங்களும், ''ஹரிபோல் ஹரிபோல்'', ''கௌர் ஹரிபோல்'' என்ற கோஷமும் சேர்ந்து நவத்வீபத்தை நிறைத்தது.

ப்ரபுவும், கதாதரர், நித்யானந்தர் ஆகியோருடன் ந்ருத்யம் செய்ய ஆரம்பித்தார். இன்று அவரது நடனம் விசேஷமாக இருந்தது. **பா**வ ஆவேசம் ஏற்பட்டு இடுப்பை அசைத்து வளைத்து கைகளை உயர்த்தி ஆடுகையில் கழுத்தில் புரளும் மாலை பூமியைத் தொட்டது. கண்கள் சொருகி பார்வை உன்முகமாக கண்ணீர் பெருக, கோகில கண்டத்துடன் பாடிக்கொண்டு, அலௌகிகமாக ப்ரபு ஆட மக்களின் பார்வை அனைத்தும் அவர் மீதே நிலைநிறுத்தப்பட்டன. நாமகீர்த்தனத்தை வெறுத்த மக்கள் கூட இதைக் கண்டு, ''இதென்ன பக்தி'' என்று வியந்தனர். இது அசாதாரணமான நிலை என்று புரிந்துகொண்டனர். ''இது போன்ற ஆனந்தத்தை பிறந்ததிலிருந்து நாம் யாரும் அனுபவித்ததே கிடையாது'' என பேசிக்கொண்டனர்.

போகப்போக கூட்டம் நெரிசலாக மாறியது. அவரவர்கள் வீட்டுவாயிலில் ப்ரபுவுக்கு ஆரத்தி எடுத்தனர். நறுமலர்களைத் தூவினர். அக்ஷதை தூவினர். வழி முழுவதும் புஷ்பங்களால் நிறைந்தது. நாமஸங்கீர்த்தனம் செய்துகொண்டே ப்ரபு, கங்காதீரத்தை அடைந்தார். பக்த மண்டலத்துடன் மெதுவாக மதாயி

காட்டை அடைந்தார். பிறகு காஜி வசிக்கும் பேல்புக்ரா என்னும் இடத்தை நோக்கிச் சென்றார். அப்போதுதான் எல்லோருக்கும் காஜியின் நினைவே வந்தது. ஆவேசத்தில், 'காஜியை அடி, கொல்லு' என கூவினர். ப்ரபுவின் அனுமதி இன்றியே காஜியின் வீட்டுக்குள் நுழைந்து செடி கொடிகளை அழித்து முரட்டுத்தனமாக நடந்துகொள்ள ஆரம்பித்தனர். காஜியின் ஆட்களும், நிமாயி பண்டிதர் ஆயிரக்கணக்கான ஜனங்களுடன் உங்களுடன் சண்டையிட வருகிறார் என அவனிடம் தவறாக முறையிட்டதில் பயந்துகொண்டு காஜியும் உள்ளே சென்று ஒளிந்துகொண்டார்.

(தொடரும்)

**— ஜயந்தி ஜானகிராமன்**

ஸ்ரீ ஹரி:

## சந்தாதாரர்கள் கவனத்திற்கு

மதுரமுரளி தெய்வீக மாத இதழ் ஆரம்பித்து எட்டு ஆண்டுகள் நிறைவடைந்துள்ளது. சந்தாதாரர்கள் மதுரமுரளிக்கான சந்தாவை உடனே அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

மதுரமுரளி மாத இதழுக்கான தங்களுடைய சந்தா எண் இந்த மாத மதுரமுரளி envelop மீது ஒட்டப்பட்டுள்ள address labelல் இரண்டாம் வரியில் உள்ளது. உதாரணத்திற்கு ஒரு சந்தா எண்ணைப் பார்ப்போம்.

சந்தா எண் : 2003061234

10 எண்கள் கொண்ட இந்த சந்தா எண்ணில் முதல் 4 எண்கள் சந்தா முடிவடையும் வருடத்தையும் அடுத்த 2 எண்கள் சந்தா முடிவடையும் மாதத்தையும் கடைசீ 4 எண்கள் சந்தா எண்ணையும் குறிக்கும். அதாவது 200306 என்பது ஜூன் 2003 உடன் சந்தா முடிவடைந்து உள்ளது என்பதாகும். அவர்கள் உடனே சந்தாவை புதுப்பித்துக் கொள்ளவேண்டும். கடைசீ 4 எண்கள் ''1234'' என்பது அவருடைய சந்தா எண். இதே போல் அவரவர்களுக்கான சந்தா எண்ணை குறித்துக்கொள்ளவும். மதுரமுரளிக்கான சந்தா அனுப்பும்பொழுதும், முகவரி மாற்றம் செய்யும்பொழுதும் சந்தா எண்ணை கட்டாயம் எழுதி அனுப்ப வேண்டும்.

# பாலகர்களுக்கு ஒரு கதை - 70

ஒரு ஸமயம், பாய்மர கப்பலை செலுத்துபவன் தன்னுடைய கப்பலை கடலில் செலுத்தி மீன்பிடிக்க எண்ணினான். அப்பொழுது மாலைப்பொழுது நன்றாக இருட்டிவிட்டது. கப்பல் கடலுக்குள் எடுத்துச் செல்லும்பொழுது அது சாயாமல் ஒரே நிலையில் இருப்பதற்காக கப்பலைச் செலுத்துபவர்கள் ஒரு பாரம் ஏதாவது ஏற்றி சமநிலைப்படுத்துவார்கள்.

அப்படியாக இந்தப் பாய்மரக் கப்பலை ஓட்டுபவனும் தன்னுடைய படகை சமநிலைப்படுத்த அங்கும் இங்கும் தேடினான். பக்கத்திலே ஒரு சாக்குமூட்டை இருந்தது. இருட்டிலே அதைப் பிரித்து கையைவிட்டுத் தடவிப் பார்த்தான். உள்ளே சிறு சிறு கற்கள் இருப்பதைப் பார்த்தான். அதை அப்படியே மூட்டையாகக் கட்டி பாரத்திற்காக படகில் ஏற்றிக்கொண்டு சென்றான். மீன்பிடித்துவிட்டு நடுஇரவில் திரும்பி வரும்பொழுது உத்ஸாஹமாகப் பாட்டு பாடிக் கொண்டே அந்த மூட்டையைப் பிரித்து ஒவ்வொரு கல்லாகக் கடலில் விளையாட்டாக வீசிக்கொண்டே வந்தான்.

கரைக்கு வந்து சேரும்பொழுது இரவு நடுநிசி இருக்கும். அப்பொழுது அந்த சாக்குமூட்டையில் ஓரிரு கற்களே மீதி இருந்தது. வீட்டிற்குச் சென்று தூங்கிவிட்டு காலையில் பொழுதுவிடிந்தவுடன் வந்து அந்த சாக்கு மூட்டையில் உள்ள ஓரிரு கற்களைப் பார்த்தவுடன் அப்படியே மூர்ச்சையாகிவிட்டான். காரணம் அவை சாதாரணக் கற்கள் அல்ல. விலைமதிப்பில்லாத உயர்ந்த நவரத்ன கற்கள். அதை நினைத்து நினைத்து வருத்தப்பட்டு அவனுக்கு பைத்தியமே பிடித்துவிட்டது.

அந்த படகோட்டிபோல்தான் நாமும் ஒருவிதத்தில் நம்முடைய வாழ்நாளிலே ஒவ்வொரு நாளும் வீணாக்கிவிட்டு விலைமதிப்பில்லாத அந்த நாட்களை எல்லாம், விளையாட்டாகத் தூங்கி, சண்டைபோட்டு, தகாத கார்யங்களை எல்லாம் செய்து வீணாக்கிவிட்டு கடைசியில் வயதான காலத்தில் காலத்தின் பெருமையை உணர்கின்றோம். ஆனால், அப்பொழுது உணர்ந்து ஒரு பலனும் இல்லையே!!

# மாலே மணிவண்ணா - 13

– மஹாவித்துவான், மயிலம் **வே. சிவசுப்பிரமணியன்**

எம்பெருமானே! நினது திருமேனியின் ஒளி, சிறப்புடைய இருண்ட நீலமணியை ஒத்திருக்கும். நீலமணி, மற்ற ஒளிகளையும் தன்னுள் அடக்கிக்கொண்டு தானே தன் தனித்தன்மை குன்றாதிருக்கும். திருமேனி நிறம் நீலமேகம் என்றும் காரிருள் என்றும் நினைப்பவர்கள் நினைப்புக்கேற்பப் பேசப்பெறும்.

*''நீல நெடுங்கிரியும் மழைமுகிலும் பவ்வ*
*நெடுநீரும் காயாவும் நிகர்க்கும் மேனி''*

என்று ஸ்ரீவில்லிபுத்தூரார் திருமேனியழகைக் கூறுவார். இராமபிரானது திருமேனியழகில் ஈடுபட்ட கவிச்சக்கரவர்த்தி கம்பர், ''மையோ மரகதமோ மறிகடலோ மழைமுகிலோ'' என்று அடுத்தடுத்து உவமைகளைச் சொல்லிப் பார்த்து அவற்றாலும் திருமேனியழகைச் சொல்லமுடியாமையால் ''அய்யோ இவன் அழகு என்பதொர் அழியா அழகு உடையான்'' என்று முடிப்பதைக் காண்கிறோம். எம்பெருமானது திருமேனிக்கு இவைகள் சாம்யமான உவமைகளாகும். அன்றி, அத்திருமேனியின் கோல நீலநிறத்தின் முழுமையையும் இவ்வுவமைகளாற் கொண்டுவர இயலாது என்பது தோற்றம்.

எம்பெருமானே! நின் திருக்கண்கள் புகழ் பொருந்திய தாமரைப் பூக்கள் இரண்டைப் பிணைத்தது போல இருக்கும். எம்பெருமானது திருநாமங்களில் ஒன்று ''புண்டரீகாக்ஷ:'' என்பது. புண்டரீகம் - தாமரை; தாமரை போன்ற கண்களை உடையவர் எம்பெருமான் என்பது பொருள். இதுபற்றி 'செந்தாமரைக் கண்ணன்' என்றே எம்பெருமானை அழைத்தலும் உண்டு. இதையொட்டி, இங்கே ஒரு இனிய காட்சியைக் காணலாம். ஸ்ரீ கம்ப ராமாயணத்தில் அந்தக்காட்சி வருகிறது.

மிதிலா நகர வீதியில் விசுவாமித்திர முனிவனைத் தொடர்ந்து ஸ்ரீ ராமபிரானும் ஸ்ரீ லக்ஷ்மணப் பெருமாளும் சென்று கொண்டிருக்கிறார்கள். அடுத்த மார்போடும் எடுத்த கழுத்தோடும் சிங்கம் போல நடந்து சென்றுகொண்டிருக்கின்ற இராமபிரான்

நிமிர்ந்து மேலே பார்க்கிறான். அங்கே மிதிலா நகரத்துக் கன்னிமாடத்து, மேலே அன்னங்கள் விளையாடுகின்ற முற்றத்தைப் பார்த்து ஆனந்தமாக ரசித்துக்கொண்டிருக்கிற பிராட்டி சற்றே சலனமடைந்து வீதியில் நடந்து செல்லும் இராமபிரானின் கண்களைத் தன் கண்களால் சந்திக்கிறாள். இதனைக் கம்பர்,

*''எண்ணரும் நலத்தினாள் இணையள் நின்றுழி*
*கண்ணொடு கண்ணிணை கவ்வி ஒன்றை ஒன்று*
*உண்ணவும் நிலைபெறாது உணர்வும் ஒன்றிட*
*அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்''*

(கம்ப. 514)

என்று அழகுறக் கூறினார்.

சனகனது திருவோலக்கம் சென்று பிராட்டியின் பொருட்டு இருந்த வில்லை முறித்தான் இராமன். வில் முறிந்த செய்தியை, இராமன் வில்லை முறித்த செய்தியைப் பிராட்டியிடம் சொல்ல விரைந்து ஓடிவருகிறாள் நீலமாலை. நீண்ட சொற்பொழிவே செய்கிறாள் நீலமாலை. கோசல மன்னன் அயோத்திக்கரசன் சக்கரவர்த்தி திருக்குமாரன், மன்மதனுக்கும் ஆசை தூண்டும் அழகு வடிவம் படைத்தவன், பேராற்றல் உடையவன், இராமன் என்பது அவன் பெயர், கோமுனியாகிய விசுவாமித்திரரோடு நம் நகர் வந்து எய்தினான் என்று இவ்வளவு சொல்லியும் பிராட்டிக்குத் திகைப்பும் தடுமாற்றமும் ஏற்பட்டதே தவிர மகிழ்ச்சி உண்டாகவில்லையாம். ஏன்? அவள் இராமனைப் பற்றி அறிந்ததெல்லாம் அந்தப் பெருமானது கண் தானே! அந்த அடையாளம் ஒன்றுதான் வில்லை முறித்தவன் தன் கண்வழி நுழைந்த காதலால் நெஞ்சில் இடம்பிடித்த நீலமேனியன் என்பதை உணர்த்த முடியும். இவ்வளவும் சொன்ன பிறகும் இளவரசியின் முகத்தில் மகிழ்ச்சி காணாத, தோழி நீல மாலை,

*''கோமுனி உடன் வரு கொண்டல் என்றபின்*
*தாமரைக் கண்ணினான்' என்ற தன்மையால்*
*ஆம், அவனே கொல் என்று ஐயம் நீங்கினாள்''*

மகிழ்ச்சிப் பெருக்கில் திளைத்தாள் பிராட்டி என்று கம்பர் (727) இப்பகுதியைத் தலைக் கட்டுகிறார்.

'தாமரைக் கண்' தான் பிராட்டிக்கு மகிழ்ச்சி தந்து தன் நாயகனைச் சுட்டி அறிதற்கு இடம் தந்தது என்பது நினைத்து மகிழத்தக்கது.

எம்பெருமானது திருக்கண்களில் குளிர்ச்சி இருக்கிறது. அழகு இருக்கிறது, ஈர்ப்பு இருக்கிறது, பரிவு இருக்கிறது, நெகிழ்ச்சி இருக்கிறது. இத்தனையும் தாமரை மலரில் இருக்கிறது. அதனால், பூவினுக்கருங்கலமாகிய பொங்கு தாமரையினும் மேம்பட்டுச் சிறந்து நிற்பது பற்றிச் சொல்ல வேண்டுமோ! பரிபாடல் இந்தத் தாமரையை 'புகழ்சால்' தாமரை என்று சிறப்பிக்கிறது. ஒருகாலத்து அலர்தலும் ஒருகாலத்துக் குவிதலும் இன்றி என்றும் மலர்ந்திருந்து மற்றவர்களைக் கவர்ந்துகொண்டு கருணைத் தேன் சிந்துகின்ற கண்கள்; தாமரைகள் அல்லவா, எம்பெருமானுடைய கண்கள். அவற்றைப் 'புகழ்சால் தாமரை' என்று சொல்லாமல் வேறு எவ்வாறு சொல்ல இயலும்.

எம்பெருமானே! நின் வாய்மை, தப்பாது வருகின்ற நாளை ஒத்திருக்கும். உலகம் காலதத்துவத்தின் வயப்பட்டது. காலச்சக்கரத்தின் ஒரு பல் தான் நாள். அது தொடர்ந்து சுற்றிக்கொண்டேயிருக்கும்; எதற்காகவும் நிற்பதில்லை.

> *''முப்பதும் சென்றால் விடியும் முப்பதும் சென்றால் இருளும்*
> *அப்படியே ஏதும் அறிநெஞ்சே!''*

என்றபடி 30 நாழிகை 12 மணிநேரம் போனால் பகல் மீண்டும் 30 நாழிகை 12 மணி நேரம் போனால் இரவு. இப்படி இரவும் பகலும் சேர்ந்த நாளின் சுழற்சி தப்பாமைபோல இறைவனது வாய்மை தப்பாது என்பது இங்கு சொல்லப் பெறுகிறது.

தப்பாமல் பயன் செய்யவல்ல வாய்மையை உடையவன் பெருமான்.

பெருமானே! நின் பொறுமை நிலத்தை ஒக்கும். நின் அருள், நீர் நிறைந்த மேகத்தை ஒத்திருக்கும் என்று வேதம் கூறும். தன்னைத் தோண்டுகிறவர்களுக்கும் தானே இடமாக நின்று தாங்குகிற நிலத்தின் தன்மைபோல தன்னை இல்லையென்று சொல்வார்க்கும் தன்னையே பற்றிக்கொண்டு அவ்வாராய்ச்சிக் கூற்றைச் சொல்ல

வைக்கின்ற பெருமான் பேரருள் உடையவன் அல்லவா! நீர் நிறைந்த மேகமானது எங்காவது ஓரிடத்தில் தன் நீரை இறக்கிக் கொட்டிவிடும். அதுபோலத் தன் சுமையை இறக்குவதற்காக அருளைச் சுமந்துகொண்டு பாகவதர்களைத் தேடி ஓடுகின்றவன் பெருமான் என்பதனை உணர்த்த நின் அருள் நீர் நிறைந்த மேகத்தை ஒத்தது என்றார்.

பெருமானே! யாம் சொல்லிய அப்பொருள்களையும் பிறவற்றையும் பண்புகளாலும் தொழில்களாலும் நீ ஒத்திருக்கின்றாய். உன் ஒப்புமைக்கு வரும் பொருள்களின் உள்ளேயும் நீயே இருக்கின்றாய். ஒத்திருக்கின்ற தன்மையால் அப்பொருள்களுக்கு அண்மையானவனாகத் தோன்றினாலும் ஒப்பின்றி எல்லாப் பொருளின் அகத்தேயும் நீ உறைகின்ற தன்மையால் அவற்றுக்குச் சேய்மையாகவும் நீ ஆகிவிடுகிறாய்.

இதனை 'உவ்வும்' என்ற உகரச்சுட்டால் குறித்தார். அகரம் சேய்மையையும், இகரம் அண்மையையும் குறிக்க, 'உகரமோ' இரண்டிற்கும் இடைப்பட்ட நிலையைக் குறிக்கிறது. (தொடரும்)

---

ஒரு ஸமயம் காஞ்சி ஸ்ரீ மஹாபெரியவர் தன்னுடைய உபந்யாசத்திலே, ''நம்முடைய தேசத்திலே அவ்வப்பொழுதும் ஒரே ஸமயத்திலும், பல அவதார புருஷர்கள், மஹான்கள் அவதரித்து நாம் இறைவனை அடைவதற்கான பல்வேறு மார்க்கங்களை உபதேசிக்கின்றார்கள். அவர்கள் பல பேர் இருந்தாலும் பல்வேறு மார்க்கங்களை உபதேசம் செய்தாலும் நம்மை ஒரே பரம் பொருளிடம் கொண்டு சேர்ப்பதுதான் அவர்களுடைய லட்சியம்'' என்று கூறினார்கள். மேலும், அந்த உபந்யாசத்திலே இதற்கு ஒரு அழகான உதாரணத்தையும் கூறினார். அதாவது, 'அந்த காலத்திலே புகைவண்டி நிலையத்திலே பல குதிரை வண்டிகள், மாட்டு வண்டிகள் நிற்கும். புகை வண்டியிலே பயணம் செய்து இறங்கி வருபவர்களை அங்கு நின்றுகொண்டிருக்கும் வண்டிக்காரர்கள் அனைவரும், ''என் வண்டியில் ஏறு, என் வண்டியில் ஏறு!'' என்று வருந்தி அழைப்பார்கள். ஆனால், அவர்கள் எல்லோருடைய லட்சியமும் நம்மை பத்திரமாக வீட்டிற்குக் கொண்டு போய் சேர்ப்பதுதான் அல்லவா! அதுபோல்தான் இதுவும்!' என்றார்.

# ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும் - 17

ஸ்ரீ தயாள்தாஸ்பாபா என்னும் மஹான் யாருடைய சிஷ்யர், அவரது பஜனை முறை என்ன என்பது பற்றி விவரங்கள் இல்லை. ஆனால், அவரது வைராக்யமும், பஜனையில் அவரடையும் **பா**வ ஆவேசமும் வ்ரஜத்தில் மிகவும் பிரஸித்தி வாய்ந்தது. அவரிடம் க்ருஷ்ண கதை புஸ்தகம், மண்பானை, கௌபீனம், ஒரு மேல்வஸ்த்ரம் இவற்றைத்தவிர வேறு ஒரு பொருள் இருக்காது. எந்நேரமும் வ்ரஜத்தில் இங்கும் அங்கும் அலைந்துகொண்டு இருப்பார். சில நேரங்களில் புத்தகத்தில் குனிந்துகொண்டு நிச்சலமாக ஒரு மூட்டையைப் போல் 20 மணிநேரம் கூட அமர்ந்திருப்பார்.

எந்நேரமும் மௌனமாக இருப்பார். மதுகரிக்கு செல்லும்போது மட்டும் க்ரஹஸ்த வ்ரஜவாஸிகளின் வீட்டு வாயிலில் உச்சஸ்தாயியில், ''ஹரே க்ருஷ்ண'' என்று கூவுவார். உள்ளே இருந்து 'ஹரே க்ருஷ்ண' என்று பதில் வந்தால் பிக்ஷைக்காக நிற்பார். இல்லாவிட்டால் மேலே நடந்து செல்வார். அவருக்கு பார்வை சரியாக தெரியாது இருந்தாலும் அரிசி, கோதுமை மாவு பிக்ஷை வாங்கிக்கொண்டு தானே சமைத்து உண்பார்.

ராஜர்ஷி வனமாலிராய் என்பவரிடம் சில சமயங்களில் அவர் வ்ரஜவாஸிகளின் சேவைக்காக பணம் பெற்றுக்கொள்வார். ஆனால், ஒரு காசு கூட தனது வ்யவஹாரத்துக்காக செலவு செய்துகொள்ள மாட்டார். ராஜர்ஷி பஹாதூர் என்பவரின் பத்னி இடத்தில் தன்னிடம் யாராவது வ்ரஜவாஸிகளின் ஸேவைக்கென தரும் பணத்தைக் கொடுத்து வைத்துக்கொள்ளச் சொல்வார். ஒரு சமயம், இப்படி சேர்ந்துவிட்ட முந்நூறு ரூபாயை அவரிடம் இருந்து வாங்கிக் கொண்டு யமுனைக் கரையில் அமர்ந்து ஒவ்வொரு ரூபாயாக யமுனையில் எறிந்துவிட்டார்.

இவரது அலௌகிகமான சக்தி வெளிப்பட்ட ஒரு சம்பவம் நிகழ்ந்தது. ராஜர்ஷிபஹாதூரின் தமையனாரான ஸ்ரீ கிரிதாரி தாஸ்பாபா என்பவரிடம் ஒரு சமயம் தயாள்தாஸ்பாபா விசேஷமான க்ருபையை செய்த சம்பவம்தான் அது. கிரிதாரிதாஸ் கோவர்தனத்தில்

உள்ள கோவிந்தகுண்டத்தில் எப்பொழுதும் பஜனை செய்துகொண்டு இருப்பார். அவர் தயாள்தாஸுடன் சேர்ந்து வ்ரஜத்திலுள்ள க்ராமங்களில் சில புராதனமான லீலா ஸ்தலங்களைக் காணச் சென்றார். கிரிதாரிதாஸுக்கு ஹெர்னியா நோய் இருந்ததால் அவர் அதற்காக 'ட்ரஸ்' என்று சொல்லக்கூடிய ஒரு இடுப்பில் கட்டிக் கொள்ளும் பெல்டை அணிந்துகொண்டு இருப்பார். அடுத்த நாள் தயாள்தாஸுடன் ஒரு குண்டத்தில் ஸ்னானம் செய்யச் செல்கையில் அவர் தனது 'ட்ரஸ்'ஸை அவிழ்த்து வைத்தபோது, தயாள் தாஸ்பாபா, ''இது என்ன?,'' என்று வினவினார். கிரிதாரிஜி ''எனக்கு ஹெர்னியா இருப்பதால் இதை அணிந்துகொள்ள வேண்டிய அவசியம் உள்ளது'' என்று கூறினார்.

தயாள்தாஸ்பாபா அவரிடம், ''அதைத் தூக்கி எறிந்துவிடு. இனி அதை அணிந்துகொள்ளும் அவசியம் உனக்கு இராது'' என்றார். கிரிதாரிதாஸ்பாபாவும் உடனே சற்றும் யோசிக்காமல் அதை எறிந்துவிட்டார். ஆனால், ஆச்சர்யமாக அவருக்கு அந்தக் கணத்திலிருந்து அவரது ஜீவிதகாலம் முழுவதும் ஹெர்னியாவின் பாதிப்பே இல்லாமல் ஆகிவிட்டது. தயாள்தாஸ்பாபா தனது வாழ்க்கையின் பிற்பகுதியை காளீயதாக்கில் ஸ்ரீ ஜகதீச்தாஸ்பாபாவின் குடிலுக்கு பின்னால் தானும் ஒரு குடிலை அமைத்துக்கொண்டு வாழ்ந்து க்ருஷ்ணனின் லோகத்தை அடைந்தார்.

இவரது முக்யமான ஒரு சிஷ்யர் ஸ்ரீஹரிதாஸ் என்னும் பாபா. இவர் வ்ரஜத்திலேயே உற்பத்தி ஆகும். அன்னத்தை நிரந்தர வ்ரஜவாஸிகளிடமிருந்து மட்டும் பெற்று வ்ரஜத்தின் ரஜஸ்ஸால் செய்த மண் பாத்திரங்களில் வைத்துக்கொண்டுதான் உண்பார். தன்னை மிகவும் நீசனாக கருதி அனைவரிடமிருந்தும் ஒதுங்கி ஏகாந்தத்திலேயே பஜனையில் நாட்களை கழிப்பார். கிழிந்த கந்தலான ஆடைகளையே அணிந்துகொள்வார். யாராவது அவருக்கு ருசியான உணவை அளித்தால் அதை மரியாதையுடன் வாங்கிக்கொண்டு தனது குடிலில் மண் பாத்திரத்தில் வைத்துவிட்டு ஒரு துளி வாயில் போட்டுக் கொள்வார். மதுகரியில் கிடைத்த உலர்ந்த பழைய உணவையே உண்பார். பிறகு வெளியே வந்து தனக்கு உணவு அளித்தவரிடம், ''நீங்கள் தந்த உணவை முழுவதும் உண்டு விட்டேன்'' என்பார்.

இரவில் அந்த சுவையான உணவை எடுத்துக்கொண்டு மெதுவாக வெளியே வந்து அதை ஏதாவது மரத்தடியில் வைத்துவிட்டு வந்து விடுவார்.

பரான்னத்தினால் தனது மனதில் விகாரமேற்பட்டு பஜனைக்கு ஊறு ஏற்பட்டு விடுமோ என்று மிகவும் பயப்படுவார். அவரது குடிலில் வெளிச்சமே இராது. மண்பாத்திரங்களில் விதவிதமாக வ்ரஜத்தின் மஹாத்மாக்களின் சரணாம்ருதத்தை வைத்திருப்பார். அதையே பருகிக்கொண்டிருப்பார்.

அவர் எந்த உலோகத்தையும் தொடமாட்டார். வ்ரஜத்தைவிட்டு வெளியே உள்ள பொருளையும் ஸ்பரிசிக்க மாட்டார். விஷயவாஸனை நிரம்பிய ஜனங்களுடன் பழகவோ, அவர்கள் தரும் பொருள்களைத் தொடவோ மாட்டார். எனவே, அவர் தினமும் ஜனங்களைத் தவிர்க்கும் எண்ணத்தில் இரவில் கோவர்த்தன பரிக்ரமா செய்வார். ஒருமுறை இரவில் பரிக்ரமா ஆரம்பித்து முடிவதற்குள் பொழுது புலர்ந்துவிட்டது. ஆனால், அவரது குடில் வரவில்லை. வழியில் அவருக்கு, ''இந்த இடத்தில் ஒரு பெரிய கோவில் கட்டி வைஷ்ணவர்களுக்கு சேவை செய்தால் நன்றாக இருக்குமே'' என்று ஒரு எண்ணம் தோன்றியது. இப்படி எண்ணம் உதித்ததுமே தனது மனதில் ஏன் இப்படி ஓர் எண்ணம் வந்தது என சோதித்துக் கொண்டார். திரும்பிப் பார்த்தார். பின்னால் ஒரு சேட்ஜி அவரைத் தொடர்ந்து வந்துகொண்டிருப்பதைக் கண்டு அவர் இந்த சேட்ஜியின் அருகாமையால்தான் தன் மனதில் இப்படி ரஜோகுணமயமான எண்ணம் தோன்றியது என்று புரிந்து கொண்டார்.

ஒரு சமயம், ஹரிதாஸ்பாபாவிற்கு ஒரு மனிதன் இன்னொரு மனிதனின் தோலை முழுவதும் உரிப்பது போல் ஸ்வப்னம் ஏற்பட்டது. விசாரித்துப் பார்த்ததில் அவருக்கு முன்தினம் பிக்ஷை அளித்த பூஜாரி தந்த அன்னம் விளைந்த க்ஷேத்ரத்தை நடத்தும் யஜமானன் ஒரு டாக்டர் எனத் தெரிய வந்தது. அந்த அன்னத்தை உண்டதன் பயனால் தான் தனக்கு இப்படி கனவு ஏற்பட்டது என்று கூறினார். ஒரு வெண்மையான துணியில் சிறிது அழுக்குப்பட்டாலும் எப்படி பளிச்சென்று தெரிந்துவிடுமோ அப்படி நிர்மலமான அவரது

மனதில் சிறு விகாரம் ஏற்பட்டாலும் அது இப்படிப்பட்ட ஸங்க தோஷத்தால் தான் என்று தீர்மானித்துக்கொள்வார். ஹரிதாஸ்பாபா எந்நேரமும் **பா**வமக்னராகவே இருப்பார். ஒரு ஆனி மாதத்து உச்சி வெயில் நேரம் சௌசத்துக்காக அவர் கோவர்தனமலையில் ஒரு மூலையைத் தேடிச் சென்றார். அவரது குடிலுக்கு அருகில் வசித்த அத்வைததாஸ் பாபா அவர் கிளம்பியதைப் பார்த்தார். இரண்டு மூன்று மணிநேரம் ஆகியும் அவர் திரும்பி வராததால் அவரைத் தேடிக்கொண்டு அத்வைததாஸ் பாபா சென்றார். சிறிது தூரம் சென்ற உடனேயே ஹரிதாஸ்பாபா வெயிலில் சாந்தமாக சலனமின்றி கண்ணீர் பெருக்கிக்கொண்டு, நடுநடுவில் உடலில் நடுக்கமேற்பட்டுக் கொண்டு, கண்கள் நிலைகுத்த நின்றுகொண்டிருப்பதைக் கண்டார். அவர் ஏதோ **பா**வோவசத்தில் இருப்பதைப் புரிந்துகொண்டார். எனவே, தனது குடிலுக்கு திரும்பிவிட்டார். ஹரிதாஸ்பாபா சுயநினைவை அடைந்து திரும்பி வந்ததும் அவரிடம், ''பாபா, இன்று என்ன சௌசத்துக்கு இத்தனை நேரம் ஆகிவிட்டது?'' என்று கேட்டார்.

ஹரிதாஸ், ''என்னவென்று சொல்வேன். கிரிராஜன் தனது சரணங்களில் எனக்கு எத்தனை நாளாக ஆச்ரயம் தந்திருக்கிறான். ஆனால், ஒரு கழுதைக்கு இருக்கும் **பா**வம்கூட எனக்குத் தரவில்லையே. வாருங்கள் உங்களுக்கும் காட்டுகிறேன். புரிந்து கொள்வீர்கள்'' என்றார். அவர் அத்வைததாஸ்பாபா தான் எங்கு நின்றுகொண்டு இருந்தாரோ அந்த இடத்துக்குக் கூட்டிச் சென்று அங்கு ஒரு குழியைக் காண்பித்து, ''இங்கே பாருங்கள் பார்த்தீர்களா? என்ன பார்த்தீர்கள் சொல்லுங்கள்!'' என்றார்.

''ஒரு கழுதை சகதியில் புரண்டுகொண்டு இருக்கிறது'' என்றார் அத்வைததாஸ் பாபா. உடனே ப்ரேம ஆவேசத்தில் கையை ஓங்கி அவரை அடிக்க வந்து, ஆனால் மெதுவாக அவரது தலையைத் தடவிக்கொண்டே ''ஹரிதாஸ் அவ்வளவுதான்'' என்றார். உடனேயே அத்வைததாஸ்பாபாவுக்கு ஸ்ரீ ராதாக்ருஷ்ண சரணதூளி என்று புரிந்துகொண்டு ப்ரேமையில் கழுதை சகதியில் புரளுகிறது என்றுதான் ஹரிதாஸ் கூற விரும்புகிறார் என்று தெளிவாகத் தெரிந்து விட்டது.

ஒரு நாள் மதுகரி முடிந்து திரும்புகையில் வரும் வழியில் அவர் **பா**வமக்னராக ஸ்ரீ க்ருஷ்ணசைதன்ய மஹாப்ரபு, நித்யானந்தர் என்று நாமங்களைக் கூவிக்கொண்டு வந்தார். அது காட்டுப் ப்ரதேசம். வழியில் ஒரு புலி படுத்திருந்தது. இவர் நாமகீர்த்தனம் செய்துகொண்டே புலியின் சமீபமாக வந்து அதைத் தாண்டிச் சென்றார். புலியும் மனிதக்குரலைக் கேட்டும் அசையாமல் படுத்துக் கொண்டிருந்தது. சிறிது தூரம் சென்றதும்தான் அவருக்கு வழியில் ஏதோ மிருகம் படுத்திருந்ததே என்று தோன்றியது. என்னவாக இருக்கும் என்ற ஆவலில் திரும்பிப் பார்த்தார். புலி உட்கார்ந்து கொண்டிருந்தது. அவருக்கு, தான் அதன் முன்பு வந்தும் அந்த மிருகம் ஜடம் போல் இருந்ததே என நினைத்து ஆச்சர்யமாக இருந்தது.

ஒரு நாள் ஒரு 25 வயது வ்ரஜவாஸி ப்ராஹ்மண இளைஞன் அவரிடம் தனக்கு குருதீக்ஷை தருமாறு கெஞ்சினான். அவரோ வ்ரஜவாஸிகளையே குருவாக நினைத்து வாழ்பவர். அவர் எப்படி தீக்ஷை அளிப்பார்? எனவே மறுத்தார். ஆனாலும், இளைஞன் பிடிவாதம் பிடிக்கவே, அவனுக்கு குருஸேவை செய்வதுபோல், நினைத்து தீக்ஷையும் ஸன்யாஸவேஷ வஸ்த்ரமும் தந்தார். அவனுக்கு ஹரேக்ருஷ்ணதாஸ் என்ற தீக்ஷாநாமமும் அளித்தார். ஆனால், ஒருநாள் கூட ஹரேக்ருஷ்ணதாஸிடம் சிஷ்ய சேவை எதையும் ஏற்றுக்கொண்டதில்லை.

ஹரேக்ருஷ்ணதாஸ், குருதேவர் ஹரிதாஸின் மறைவுக்குப் பிறகு விரஹத்தால் தவித்தார். அவரது ஆஸனத்துக்கு அருகில் ஆஸனம் அமைத்துக்கொண்டு ஒரு வருஷம் ஏகாந்தமாக பஜனம் செய்துகொண்டு இருந்துவிட்டு அவரும் குரு சரணத்தை அடைந்தார். குரு-சிஷ்யர் இருவரது ஸமாதியும் ஜதீபுரில் ஐராவதகுண்டத்துக்கு கிழக்கில் அருகருகே அமைந்துள்ளதை இன்றும் காணலாம்.

(தொடரும்)

**— ஜயந்தி ஜானகிராமன்**

# ஸ்ரீ ஸ்வாமிஜியின் ஸம்பாஷணைகளிலிருந்து - 97

*தூய்மன மொழியர் தோயுமுன் மெய்யகந்*
*தோயவே அருளென் அருணாசலா*

உலகில், சாதுக்களின் சரித்திரம் மிகவும் ஆச்சர்யமாயிருக்கும். ஒருவர் மஹாத்மா என்பதை அவரின் சரித்திரத்தை கொண்டு தெரிந்துகொள்ளலாம். மஹாத்மாக்கள், எல்லோருடனும் சகஜமாக, சிரித்து பேசி பழகி இருப்பர். அவர்களின் வாழ்க்கையில் ஒளிவு, மறைவு என்பது எதுவும் இருக்காது. காலையில் எழுந்ததுமுதல் இரவு படுக்கும்வரை அவர்களின் வாழ்க்கை, ஒரு திறந்த புத்தகம் போல் மறைக்கவேண்டிய விஷயமின்றி இருக்கும். சாதாரண மனிதர்களிடம் சாதுக்கள், மிக அன்புடன் பழகி, ஆகர்ஷணம் செய்து, நல்லுபதேசங்களினால் அவர்களின் வாழ்க்கையை மாற்றி, கடவுளின் திருவடியில் கொண்டு சேர்த்து விடுவர். மேற்கண்டவைகள் உத்தம மஹாத்மாக்களின் லக்ஷணம்.

பகவான் ரமண மஹரிஷிகளின் சரித்திரத்தை எடுத்து பார்த்தால், அவர் எப்பொழுதும் கௌபீனம் மட்டுமே கட்டி வந்திருக்கிறார். ஒரு பைசாவை கூட அவர் கையால் தொட்டதில்லை. ஆரம்ப காலங்களில் பிக்ஷை எடுத்தே சாப்பிட்டு வந்திருக்கிறார். சிஷ்யர்கள் பிக்ஷை எடுத்து கொடுத்ததை சாப்பிட்டு உள்ளார். மிகப்பெரிய வெளிநாட்டு பிரபுக்கள்கூட அவர் காலில் வந்து விழுந்துள்ளனர். அப்பொழுதும்கூட அவர் வாழ்க்கையில் மாற்றம் என்பதே இல்லை. அவர் ஒரு காரில் ஏறினார் என்றோ, அல்லது இன்று ஒருநாள் மட்டும் பணத்தை கையால் தொட்டார் என்றோ இல்லாமல், தனது வாழ்க்கை நெறியிலிருந்து சிறிதும் பிசகாமல் வாழ்ந்து காட்டியுள்ளார்.

'தூய்மன மொழியர்' - சாதாரண மனிதர்களிலே கூட பொய்யே சொல்லாமல் வாழும் நபர்களை நம்மால் பார்க்கமுடியும். ஆக, இவ்விஷயத்தில் மஹாத்மாக்களை பற்றி கேள்வியே இல்லை.

அவர்கள் வாயிலிருந்து பொய்யே வராது. ரமண மஹரிஷிகளின் சரித்திரத்தை புத்தகமாக போட்டுள்ளனர். 'Day by Day with Bhagawan' எனும் புத்தகத்தில் அவர் காலையில் எழுந்தது முதல் இரவு படுக்கும்வரை என்ன நடந்தது என்று எழுதி உள்ளது. அதே போன்று ராமகிருஷ்ண பரமஹம்ஸரைப் பற்றி கூட, 'ம' எனும் பக்தர் அழகாக ஒரு நாட்குறிப்பை எழுதிச் சென்றுள்ளார். இத்தகைய மஹாத்மாக்களுக்கு, உலகிற்கு உபதேசம் செய்ய வேண்டிய அவசியமே இல்லை. நம்முடன் அவர்கள் பேசவேண்டிய அவசியமும் கிடையாது. இருப்பினும் உயர்ந்த மஹாத்மாக்கள், நம் போன்றவர்களிடம், தங்களது நிலையிலிருந்து இறங்கி, நம்மிடம் இரு வார்த்தைகள் குசலம் விசாரிப்பதோ, உபதேசம் செய்வதோ, நமக்கு பெரும் பாக்யம். நமக்கு இந்த விஷயத்தில் யாதொரு தகுதியும் கிடையாது. இருப்பினும் அவர்கள் பரம கருணையினால் மிக சௌலப்யத்துடன் இருக்கின்றனர்.

ஆதலின் அத்தகைய மஹாத்மாக்கள் பேசியே ஆகவேண்டும். ஏனெனில், அவர்கள் மக்களுக்கு உபதேசம் செய்யாவிடில், ஜீவன்கள் உய்ய வழி ஏது? வேறு வழியே இல்லை. மஹாத்மாக்களுக்கு நம்மேல் கருணை வாராதிருப்பின், மற்றவர்களுக்கு நம்மேல் கருணை வந்து யாது பயன்?. உயர்ந்த ஆத்ம ஞானத்தை அடைந்த அவர்கள், ஜீவன்களிடம், ''உன்னை சரீரம் என்று நினைத்து துக்கப்படாதே. நீ என்றும் அழியாத ஆத்மவஸ்துவே'' என்று கருணையுடன் ஞாபகப்படுத்துகின்றனர்.

உபநிஷத்தில் ஜீவனானவன் ஆத்மவஸ்துவே என்பதை விளக்க ஒரு அருமையான கதை உள்ளது.

ஒரு ராஜா, நல்ல சாதுவாய், ராஜ்ய பரிபாலனம் செய்து வந்தான். அவனுடைய ராஜபத்னி நிறைமாத கர்ப்பிணியாய் இருந்தாள். அதுசமயம் மந்திரியானவன் சூழ்ச்சியால் மன்னனை வீழ்த்தி, ராஜ்யத்தை அடைய பார்க்கிறான். இதை அறிந்த மன்னனும், ராணியும் (ஜனங்களும் சூழ்ச்சிக்கார மந்திரி பின் சென்றதினால்) ஓரிரவில் குதிரை மேல் ஏறி தப்பி சென்று விடுகின்றனர். தப்பிச் செல்லும்பொழுது, ஒரு நடுக்காட்டில் ராணிக்கு ஒரு அழகான ஆண்குழந்தை பிறக்கிறது. குழந்தையை பார்த்த ராணியும்,

ராஜாவும், ''நம்மை பின்தொடர்ந்து நிச்சயம் மந்திரியின் ஆட்கள் வருவர். ஒருவேளை நம்மை அவர்கள் பிடித்துவிட்டால் நம்மை கொன்றுவிடுவர். அது சமயம், இக்குழந்தையும் நம்மிடமிருந்தால், இதையும் கொன்றுவிடுவர். நாமிறக்க நேரிட்டாலும், இக்குழந்தை இறக்ககூடாது'' என்று ஆலோசித்து, அக்காட்டில் உள்ள ஒரு வேடுவச்சியிடம், குழந்தையை வளர்க்கச்சொல்லி, ஒப்படைத்து செல்கின்றனர்.

அந்த வேடுவச்சி தனது குலவழக்கப்படியே ராஜகுமாரனை வளர்க்கிறாள். ஒரு கோவணத்தை கட்டிவிட்டு, தலையில் கோழி இறக்கையை சொருகி, வேட்டைக்கு அனுப்புகிறாள். அக்குழந்தை மற்ற வேடுவக் குழந்தைகளுடன் விளையாடி வருகிறது. அந்த வேடுவச்சி, அக்குழந்தையிடம் அவன் ஒரு ராஜ சிசு என்பதை சொல்லவில்லை. சொன்னால், புரியாத வயது என்பதால் தகுந்த வயது, விவேகம், அறிவு வந்தவுடன் சொல்லலாம் என்று இருந்தாள். நாட்கள் கடந்தன. ராஜகுமாரன் வேடுவகுமாரனாய் வளர்ந்தான்.

வேடுவச்சிக்கு அந்திமகாலம் வந்தது. அவளுக்கு அப்பொழுது அந்த வேடுவகுமாரனிடம் அவனுடைய உண்மையை சொல்ல வேண்டும் என தோன்றியது. அவனை கூப்பிட்டு, அவன் ஒரு ராஜகுமாரன் எனும் உண்மையை சொன்னாள். ''தான் ராஜகுமாரன்'' என்று தெரிந்தவுடனே, அந்த வேடுவனாய் வளர்ந்த குழந்தை, தனது உடைகளையும், அலங்காரத்தையும் மாற்றிக் கொண்டான். தகுந்த உபாயத்தால், தக்க துணைகொண்டு, மந்திரியை வென்று மீண்டும் ராஜாவாக சிம்மாசனத்தில் அமர்கிறான்.

ராஜாவான குழந்தையேதான், வேடுவக் குழந்தையாக இருந்தான். ஆனால், தான் ராஜா என்பதை தெரிந்துகொள்ளாமல் இருந்து வந்துள்ளான். தக்க தருணத்தில்தான் வேடுவச்சி உண்மையை சொல்கிறாள். இதன் தாத்பர்யம் என்னவென்றால், நாம் குருவிடம் பழகும் காலத்தில், குரு, நம் மீது சந்தோஷப்பட்டு, நமக்கு என்று பக்குவம் வருகிறதோ, அன்று நமக்கு உபதேசம் செய்வார். அதனாலேயே பகவான் கிருஷ்ணர் கீதையில், ''தத்வித்தி ப்ரணிபாதேன பரிப்ரஶ்னேன ஸேவயா'' என்கிறார்.

குருவிடம் சென்று கைங்கர்யம் செய்து வரவேண்டும். அவர் என்ன அனுக்ரஹம் செய்கிறார், யாது உபதேசம் செய்தார் என்று கேட்ககூடாது. குரு சிஷ்யனை பார்ப்பதே உபதேசம். குரு சிஷ்யனை தொடுவதே உபதேசம். நான்கு நபர்களிடம் பேசுவது போல், சாதாரணமாக சிஷ்யனிடம் பேசுவதே உபதேசம். குரு தனிப்பட்ட உருவில் இருந்து உபதேசம் செய்யவேண்டிய அவசியமே இல்லை. உத்தம குரு ப்ரக்ருதி ஸ்வரூமாயிருந்து, ஸகலரூபத்திலும் அனுக்ரஹமும், உபதேசமும் செய்வார்.

மேலும் வேடுவசிசு, ராஜசிசுவாய் மாறவில்லை. ராஜசிசுதான் அது என்றும். 'தான் யார்' என்று தெரிந்தவுடன் அதன் ஸ்வரூபத்தில் மாற்றம் ஏற்படவில்லை. அதன் புத்தியிலும், சித்தத்திலும்தான் மாற்றம் ஏற்படுகிறது. அதுபோல், நாம் ஜீவாத்மா என்று நினைத்து எப்பொழுதும் உலகில் துக்கப்பட்டுக் கொண்டுள்ளோமே, இது நமது சொரூபமில்லை. நமது யதார்த்தம் என்பது வேறு. இக்கதையில், வேடுவ குழந்தை, ராஜாவாய் சிம்மாசனத்தில் அமருவதே ப்ரும்ம சாக்ஷாத்காரம் ஆகும். நமது யதார்த்தமான நிலையில் நாம் இல்லாத பொழுது (ஆத்மாவே நமது யதார்த்த ஸ்வரூபம்), யதார்த்தத்தை தேடி அலைய வேண்டியது அவசியம் ஆகிறது.

**(தொடரும்)**

---

ஸ்ரீ ஹரி:

## ஸ்ரீமத் பாகவத உதயாஸ்தமன ஸப்தாஹம்

மதுரபுரி ஆஸ்ரமத்தில் எழுந்தருளியுள்ள மாதுரிஸகீ ஸமேத ஸ்ரீ ப்ரரேமிகவரதனின் கோடி அர்ச்சனை விரைவில் பூர்த்தியடைய இருக்கின்றது. இந்த கோடி அர்ச்சனையை ஸ்ரீ ம்ருத்யுஞ்ஜய சர்மா தனி ஒருவராக நிகழ்த்தி வருகிறார்கள்.

கோடி அர்ச்சனை பூர்த்தியை ஒட்டியும், ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜியின் வர்தந்தியை ஒட்டியும் நவம்பர் 15-ந் தேதி முதல் 21-ந் தேதி வரை மதுரபுரி ஆஸ்ரமத்தில் ஸ்ரீமத் பாகவத உதயாஸ்தமன ஸப்தாஹம் நடைபெற உள்ளது.

# ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜியின் நிகழ்ச்சி விபரம்

| | |
|---|---|
| 11-10-2003 முதல்<br>12-10-2003 வரை | ராதா கல்யாணம்<br>இடம் : வேணுகோபால விஜய மண்டபம்<br>வரசித்தி விநாயகர் திருக்கோவில்,<br>புதுப்பட்டினம், கல்பாக்கம் - 603 102 |
| 13-10-2003 முதல்<br>19-10-2003 வரை | ஸ்ரீமத் பாகவத ஸப்தாஹ பாராயணம்<br>இடம் : Sri Sethuraman<br>Ram Geeth, 28/967, Cheru Tarambath Road,<br>Kadavanpra, Kochi - 682 020. |
| 21-10-2003 | ஏகாதசி<br>இடம் : மதுரபுரி ஆஸ்ரமம் |
| 26-10-2003 | ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜியின் ஜயந்தி மஹோத்ஸவம்<br>இடம் : மதுரபுரி ஆஸ்ரமம் |
| 28-10-2003 முதல்<br>30-10-2003 வரை | உபன்யாஸம்<br>இடம் : அபேதானந்த ஆஸ்ரமம்<br>திருவனந்தபுரம் |
| 1-11-2003 முதல்<br>7-11-2003 வரை | ‘‘பக்த சரித்ரங்கள்’’ உபன்யாஸம்<br>இடம் : அண்ணாநகர், சென்னை |
| 10-11-2003 முதல்<br>13-11-2003 வரை | ‘‘பக்த சரித்ரங்கள்’’<br>இடம் : ராஜு மஹால்<br>கோயமுத்தூர் ரோடு, பொள்ளாச்சி |
| 15-11-2003 முதல்<br>21-11-2003 வரை | ஸ்ரீமத் பாகவத உதயாஸ்தமன ஸப்தாஹம்<br>இடம் : மதுரபுரி ஆஸ்ரமம் |

# பக்தர்களின் கவனத்திற்கு!

நமது **மதுரபுரி ஆஸ்ரம வளாகத்திற்குள்** தியானகூடமோ, தெய்வ பிரதிஷ்டையோ, அதிஷ்டானமோ எதுவும் கிடையாது. ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி, ஆஸ்ரமத்தில் தங்கியிருக்கும் காலங்களில், **மாதுரிஸகி ஸமேத ஸ்ரீ பிரேமிகவரதனுக்கு பூஜையும் ஸத்ஸங்கமும்** நடைபெறும். ஆஸ்ரம வளாகத்திற்குள் **யஜுர், ஸாம வேதபாடசாலை** நடந்து வருகின்றது. சுமார் அறுபது வித்யார்த்திகள் வேதம் பயின்று வருகிறார்கள். ஆஸ்ரமத்தில், கைங்கர்யம் செய்து வருபவர்களும் அவர்களுடன் தங்கியுள்ளார்கள். வேதம் பயிலும் மாணவர்களுக்கு இடையூறு ஏற்படக்கூடாது என்ற நல்லெண்ணத்தில், **ஸ்ரீ ஸ்வாமிஜி ஆஸ்ரமத்தில் தங்கியிருக்கும்பொழுது மட்டுமே பக்தர்கள் காலை 9 மணி முதல் 11 மணி வரையிலும், மாலை 4 மணி முதல் 6 மணி வரையிலும்** தரிசனத்திற்கு ஆஸ்ரமத்திற்குள் அனுமதிக்கப்படுவார்கள்.

ஆஸ்ரம வளாகத்திற்கு பக்கத்திலேயே ஸ்ரீ ஸ்வாமிஜியால் **ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸபெருமாள் ஆலயம்** நிர்மாணிக்கப்பட்டு நித்ய ஆராதனைகள் நடந்து வருகின்றது. தினமும், **காலை 6.30 மணி முதல் 11.30 மணி வரையிலும் மாலை 5 மணி முதல் 8 மணி வரையிலும்** கோவில் திறந்திருக்கும். பக்தர்கள் இந்த நேரத்திற்குள் எப்பொழுதும் பெருமாளை ஸேவிக்கலாம்.

சென்னை K.K. நகரில் (ஜாபர்கான்பேட்டை) பிரேமிகபவனத்தில் ஸ்ரீ ஸ்வாமிஜி இருக்கும் சமயத்தில் அவரை **காலை 8 மணி முதல் 10 மணி வரையிலும் மாலை 5.30 மணி முதல் 8.30 மணி வரையிலும்** தரிசனம் செய்யலாம். ஸ்ரீ ஸ்வாமிஜியை தரிசனம் செய்யும்பொழுது அவரிடமிருந்து **பகவந்நாம உபதேசம்** பெற்றுக்கொள்ள விரும்புபவர்கள் பெற்றுக்கொள்ளலாம்.

ஒவ்வொரு மாதமும் **மதுரமுரளி** இதழில் ஸ்ரீ ஸ்வாமிஜி, அந்த மாதத்தில் எங்கு இருப்பார் என்ற விவரம் முன்கூட்டியே தெரிவிக்கப்பட்டுவிடும். இதைத்தவிர, மற்ற நேரங்களில் ஸ்ரீ ஸ்வாமிஜியை தரிசனம் செய்யவேண்டும் என்றால் **முன் அனுமதி** பெற்றுக்கொண்டு தரிசிக்கலாம்.

கடிதங்களை நமது நிர்வாக அலுவலகத்திற்கு "Personal Secretary to H.H. Sri Sri Muralidhara Swamiji" என்று அனுப்ப வேண்டும். கடிதங்கள் அனுப்ப வேண்டிய முகவரி கீழே தரப்பட்டு உள்ளது. ஸ்ரீ ஸ்வாமிஜியின் உதவியாளருக்கே கடிதங்களை அனுப்ப வேண்டும். அவர் ஸ்ரீ ஸ்வாமிஜியிடம் தெரிவிக்க வேண்டிய செய்திகளைத் தெரிவிப்பார். நமது மிஷனிற்கு E-mail address உள்ளது. ஸ்ரீ ஸ்வாமிஜிக்கு தனிப்பட்ட E-mail address கிடையாது.

**கடிதங்கள் அனுப்ப வேண்டிய முகவரி :**

**"**Personal Secretary to **H.H. Sri Sri Muralidhara Swamiji"**
**Guruji Sri Muralidhara Swamigal Mission**
Premika Bhavanam, New No.2, (Old No.24),
Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600 083.
E-mail : contact@madhuramurali.org

# செய்திகள்

### செப்டம்பர் 8-ந் தேதி

திருநாங்கூர் திவ்யதேசம் கீழச்சாலை ஸ்ரீ மாதவபெருமாள் திருக்கோயில் மஹாஸம்ப்ரோக்ஷணத்தில் ஸ்ரீஸ்ரீ ஸ்வாமிஜி கலந்து கொண்டார்கள்.

### செப்டம்பர் 13, 14 தேதிகள்

கோயமுத்தூர், கோவைபுதூர் ஸ்ரீ அன்னபூரணி ஸ்ரீ யோக நரசிம்மர் திருக்கோயிலில் நடைபெற்ற ராதா கல்யாண மஹோத்ஸவத்தில் ஸ்ரீ ஸ்வாமிஜி கலந்துகொண்டார்கள்.

### செப்டம்பர் 20-ந் தேதி, 27-ந் தேதி

மஹாரண்யம் ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸ பெருமாள் திருக்கோயில் உத்ஸவமூர்த்தி ஸ்ரீ பக்தகுதூஹலன், புரட்டாசி சனிக்கிழமையை ஒட்டி 20-ந் தேதி மலைப்பட்டு கிராமத்திற்கும், 27-ந் தேதி மஹாரண்யம் கிராமத்திற்கும் புறப்பாடு கண்டருளினார்.

**மங்களானி பவந்து**